சங்ககிரி, தென்காசி போன்ற இடங்களிலே புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. யூனிட் அலுவலகங்களும் 8 இடங்களிலே புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆத்தூரிலே இடம் இருக்குமானால்—நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், R.T.O. அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்குரிய நிதியைப்பற்றிப் பிரச்சினை இல்லை; அரசிடமிருந்து நிதி உடனடியாகக் கிடைக்கும்; அங்கே இடம் இருக்குமானால் உடனடியாகக் கட்டடம் கட்டப்படும். நான் அங்கு சென்றிருந்தபோதே ஆத்தூர் யூனிட் அலுவலகத்தை R.T.O. அலுவலகமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். வருகிற ஆண்டு அதனுடைய கணக்குகளைப் பார்த்து, வாகனங்கள் எவ்வளவு பதிவாகின்றன என்று பார்த்து, R.T.O. அலுவலகம் அமையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமானால் நிச்சயமாக அது அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *26*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

**சீரமைப்பு**

***33783—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி அரசு மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாங்குநேரி அரசு மருத்துவமனைக்குச் கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.*2.75* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நாங்குநேரி அரசு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

2008 நவம்பர் 13]

மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டிக் கொடுத்ததற்காக நன்றியைச் சொல்லும் அதேநேரத்தில், அங்கு 6 மருத்துவர்கள் இருக்க வேண்டும்; அதற்குப் பதிலாக மொத்தமே 3 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள்; அமைச்சர் பெருமகனார் அந்த டாக்டர்களையும் நியமனம் செய்தால், நாங்குநேரி தொகுதி மக்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள்; எனவே, அதையும் செய்து தரவேண்டும் என்று பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி மருத்துவமனையில் சித்த மருத்துவர் உட்பட 7 மருத்துவர்கள் பணி புரிகின்றார்கள். செவிலியர்கள் 8 நபர்கள் பணி புரிகின்றார்கள். மருந்தாளுநர், ஆய்வு நுட்புநர் மற்றும் இதர பணியாளர்கள் 26 நபர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மருத்துவர்கள் எல்லாம் பணி புரிகின்றார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது கிட்டத்தட்ட 40 சதவிகித மருத்துவப் பணியாளர் இடங்கள் காலியாக இருந்தன; அவற்றைப் படிப்படியாகப் பூர்த்தி செய்துகொண்டிருக்கின்றோம். 300, 350 மருத்துவர் பணியிடங்கள்தான் தமிழ்நாடு முழுவதும் காலியாக இருக்கின்றன. 10, 15 நாட்களில் அந்தப் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருந்த மத்திய சிறைச்சாலை புழலுக்கு மாற்றப்பட்டு, இப்போது சென்னை மத்திய சிறைச்சாலை இருந்த இடம் காலியாக இருக்கிறது. பொது மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து, அளவுக்கு அதிகமான நோயாளிகள் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே சென்னை மத்திய சிறை இயங்கிய இடத்திலே, சென்னை பொது மருத்துவமனையினுடைய விரிவாக்கம் விரைவில் செய்யப்படுமா; அதற்கான திட்டங்கள் அரசிடம் உள்ளதா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடந்த சில நாட்களுக்கு முன்பாக எங்கள் துறையை ஆய்வு செய்யும்போது, மத்திய சிறைச்சாலைக்கு ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலத்தைப் பொது மருத்துவமனைக்காக ஒதுக்கீடு செய்தார்கள். அந்த இடத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 10 மாடி கொண்ட கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்ற செய்தியை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பல சிறப்புப் பிரிவுகளை அதிலே தொடங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள். வருகின்ற நிதிநிலை அறிக்கையில் முழுமையாக அதுகுறித்த அறிவிப்பு தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியில் உள்ள பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் கடந்த ஆண்டு Accident and Emergency Ward என்று சொல்லப்படுகின்ற விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவுப் பகுதியைக் கட்ட, இந்த அரசு ஆவன செய்ததற்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புற நோயாளிகள் பகுதி, மழைக் காலத்தில் மழை நீர் ஒழுகுகின்ற நிலையில் இருக்கின்றது. அக்கட்டடத்திற்கு மாற்று கட்டடம் கட்ட, வருமாண்டிலே இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இருக்கின்ற 5 மாவட்டங்களில் இப்போது 35 அரசு மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மீதம் உள்ள 24 மாவட்டங்களில் உள்ள 224 அரசு மருத்துவமனைகளிலும் ரூ.222 கோடி

2008 நவம்பர் 13]

செலவில் பராமரிப்புப் பணிகள், கட்டடங்கள் கட்ட, கருவிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வாங்க மற்றும் பணியாளர் நியமனம் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில், அத்தகைய மருத்துவமனைகளும் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது 224 மருத்துவமனைகளில் 124 அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்தப் புள்ளிகள் முடிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதம் உள்ள 100 மருத்துவமனைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்ய பரிசீலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக முடிகின்ற காலத்தில், 5, 6 மாத காலத்தில் தமிழகத்தில் இருக்கிற அனைத்துத் தாலுகா மருத்துவமனைகளும் புனரமைக்கப்பட்ட காட்சி தெரியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் 88 படுக்கைகள்தான் இருக்கின்றன. மருத்துவமனைக்கு என்று கட்டடம் கட்ட நிறைய இடம் இருக்கிறது. மக்கள் தொகை மிகவும் அதிகரித்துவிட்ட காரணத்தினால் மதுராந்தகம் மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி செய்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுராந்தகம் அருகில் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

[2008 நவம்பர் 13

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்திருக்கிற கலசப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படுமா என்றும், திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய தலைநகரத்திலே அமைந்திருக்கிற மாவட்ட மருத்துவமனையில் போதிய இட வசதி இல்லாமல் நோயாளிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமையைக் கருத்திலே கொண்டு உடனடியாக அங்கே கூடுதல் கட்டடங்களும் கட்டி, போதிய மருத்துவர்களையும் நியமிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத் தலைமை மருத்துவமனையைப் பற்றி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் இத்தகைய கோரிக்கையைத் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்குரிய நடவடிக்கையை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

மேலும், அவருடைய தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா என்று கேட்டார். இந்த ஆண்டு 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வருகின்ற காலத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே திருப்பூரில் செயல்பட்டு வருகிற மாவட்ட அரசு மருத்துவமனை மிகவும் பழுதடைந்துள்ள நிலையை அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை, 2006 ஆம் ஆண்டு அழைத்துச் சென்று காட்டினேன். புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியத்தை அவரும் ஏற்றுக்கொண்டு சபையிலும் அறிவித்தார்கள். அதுபோல், தற்போதைய

2008 நவம்பர் 13]

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையும் அந்த மருத்துவமனையை நேரில் அழைத்துச் சென்று காண்பித்தேன். கடந்த ஒரு மாத காலம் தொடர்ந்து பெய்த மழையால் அந்தக் கட்டடம் முழுவதும்—படுக்கைகள், நோயாளிகள் படுத்திருக்கிற இடங்கள் முழுவதும்—மழை கொட்டுகிற நிலை உள்ளது. எந்த நேரத்திலும் இடிந்து விழுகிற நிலை. அங்கே படுக்கையிலே இருக்கும் நோயாளிகள் குடை பிடித்துக் கொண்டு படுத்திருக்க வேண்டிய அளவுக்கு நிலைமை நிரம்ப மோசமாக இருக்கின்றது. ஏதாவது ஒரு சூழ்நிலையில், தொடர் மழையில் அது இடிந்து விழுந்தால் பல உயிர்கள் பலியாகிற ஆபத்து இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், 35 ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே அந்த மருத்துவமனை கட்டப்பட்டது. அன்று இருந்த அந்த திருப்பூரினுடைய ஜனத்தொகை தற்போது 10 மடங்கு கூடியிருக்கிறது. நோயாளிகளுக்குப் போதுமான இட வசதி இல்லாத நிலையில் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ள காரணத்தினாலும், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி இட நெருக்கடி இருக்கிற காரணத்தினாலும் புதிய கட்டடம் தேவை. அங்கே கூடுதல் இட வசதியும் இருக்கிறது. புதிய கட்டடம், விரிவான ஒரு கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் துறையின்மூலம் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று நான் திருப்பூர் சென்றபோது, திருப்பூர் மருத்துவமனையை ஆய்வு செய்தபோது, அங்கே கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டிருந்த காட்சியைப் பார்த்தேன். பொறியாளர்கள் கொண்ட குழுவை அங்கே அனுப்பி, அதனுடைய நிலையைக் கண்டறிவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. புதிய கட்டடம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்கின்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.